கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 72/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 நல்லுசாமி திரு.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 28.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் சுமார் 15 வருடங்கள் இருக்கும். அதற்கு முன்பு வேறு பகுதியில் வசித்தேன் என்றால் அய்யம்பாளையம் என்ற ஊரில் வசித்தேன். வாதி எனக்கு உறவினரா என்றால் எனது பெரியப்பா மகன் ஆவார். வாதி நிரந்தரமாக ஊருக்குள் தான் வசிக்கிறார் என்றாலும், தாவா சொத்தில் உள்ள இடத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை எந்த சொத்திற்காக என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.475/1 மற்றும் சர்வே எண்.475/3 குறித்து வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. வாதி சர்வே எண்.475/2B , 475/2D ஆகிய நிலங்களை பொறுத்து மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் உள்ள வழக்கு சொத்து தற்போது வரை வாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டு அவரது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு பங்கு பாத்தியம் மற்றும் உரிமை ஏதும் இல்லை என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் இவ்வழக்கிற்கு முன்பு சுமார் ஒரு வருடமாக சொத்து பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். வாதி என்னிடம் பிரச்சனை செய்வதாக கூறி நான் காவல் நிலையத்தில் புகாரோ அல்லது வேறு ஏதும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வாதி இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாலவிடுதி காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். அதிக முறை புகார் அளித்துள்ளார். மேற்படி புகார்களுக்கு நான் விசாரணைக்கு சென்றேன் என்றால் சரிதான். காவல் அதிகாரிகள் மேற்படி புகாரில் என்ன முடிவு செய்தார்கள் என்றால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடி கொள்ளுமாறு கூறினார்கள். மேற்படி புகாருக்கு பின்னிட்டு வாதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா

சொத்திற்கு அருகில் எந்தெந்த சர்வே எண்களில் எனக்கு உரிமையான சொத்து உள்ளது என்றால் சர்வே எண்.475/1 மற்றும் சர்வே எண்.475/3 ஆகிய நிலங்கள் உள்ளது.

4. மேற்படி என்னுடைய சொத்திற்கு செல்வதற்கு கிழமேல் பொதுபாதை உள்ளது என்றால் ஆத்துவாரி வரை கிழமேல் பொதுபாதை உள்ளது. மேற்படி கிழமேல் பொதுபாதையின் வழியாக எனது நிலத்திற்கு செல்லலாம் என்றும், வாதியின் நிலத்திற்குள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். எனது இடத்திற்கும் வாதி இடத்திற்கும் இடையே 6 பனை மரங்கள் இருந்ததா என்றால் 5 பனை மரங்கள் இருந்தன. மேற்படி பனை மரங்கள் பொதுவானது என்றால் சரியல்ல. நான்கு பனை மரங்கள் வாதியின் நிலத்திலும், 1 பனை மரம் எனது நிலத்திலும் இருந்தது. வாதி அவரது இடத்தில் இருந்த 4 பனை மரங்களையும் எடுத்துவிட்டார். உண்மையிலேயே மேற்படி 5 பனை மரங்களும் வாதியின் இடத்தில் தான் இருந்தது என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது இடத்தில் ஒரு பனை மரம் இருந்தற்காக அரசு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி அவரது சொத்தை அனுபவம் செய்வதில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனது அனுபவத்தை தான் வாதி இடையூறு செய்து வருகிறார். எனது அனுபவத்தை வாதி இடையூறு செய்தார் என்பதற்காக எதிர் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். வாதி வயதானவர் என்றும், நான் அவரை தொடர்ச்சியாக இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேய வாதி எனக்கு இடையூறு செய்திருந்தால் நான் புகாரோ அல்லது வழக்கோ தாக்கல் செய்திருப்பேன் என்றும், வாதி அவ்வாறு இடையூறு செய்யாததால் தான் நான் எந்த புகாரும், வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி தான் புறம்போக்கு பாதையில் கொட்டகை போட்டு எனக்கு இடையூறு செய்து வந்ததால் நான் வாதி மீது புகார் கொடுத்துள்ளேன்.

6. மேற்படி நான் புகார் அளித்தது சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அதன் விவரங்களை எனது பதிலுரையில் சொல்லியிருப்பேன் என்றும், இவ்வழக்கை மேம்படுத்துவதற்கு புதிய சங்கதிகளோடு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் தாவா சொத்தை பார்வையிட

வரும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். ஆணையர் அளக்கும் போது வாதியின் இடத்தில் நான் ஒரு இன்ச் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக கூறினாரா என்றால் இல்லை. எனது எதிர் வழக்குரையின் 12ம் பத்தியில் நான்வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ததில்லை என்று கூறி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. அவ்வாறு இடையூறு செய்ததும் இல்லை. இடையூறு செய்ய போவதும் இல்லை. வாதியின் அனுபவத்தை நான் எந்த வகையிலும் இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யாததால் வாதி கோரியபடி வழக்கை அனுமதிப்பதில் எனக்கு எந்தவகை ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்திற்கு அருகே மேற்சொன்னவாறு பாதை உரிமை இருந்திருந்தால் இவ்வழக்கில் எதிர் உரிமை கோரிக்கை பரிகாரம் கோரியிருப்பேன் என்றால் சரியல்ல. வாதியின் நிலத்தில் நான் ஆக்கிரப்பு செய்ததால் தான் ஆணையர் அவரது அறிக்கையில் மேற்படி ஆக்கிரமிப்பு பற்றி கூறி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.8 வரையான ஆவணங்களில் வாதியின் நிலத்தின் வழியாக தான் பாதை உள்ளது என்று எந்த ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளது என்றால் பி.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ளது. பி.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்படி பாதையானது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து இவ்வழக்கிற்கு குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே வாதியின் அனுபவத்தை நான் மேற்படி ஊரில் குடியிருந்து வந்த காலத்திலிந்து வழக்கு சொத்தில் பிரச்சனை செய்து இவ்வழக்கிற்கு முன்பு ஒரு வருட காலமாக அதிகபடியாக பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

9. நான் வாதி மீது பிரச்சனை செய்து வந்த காரணத்தினால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு அருகே தாவா சொத்து உள்ளதால் வாதியின் சொத்தை அதிகபடியாக அபகரிக்க வேண்டும் என்றும் எண்ணத்தில் பொய்யான சங்கதிகள் கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதி ஊருக்குள் இருந்ததால் வாதியின் காலி இடத்தில் நடந்து வந்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றால்

சரியல்ல. நான் உண்மையில் வாதியின் அனுபவத்தை எவ்வித பிரச்சனையும் செய்ததில்லை என்று எதிர் வழக்குரையில் 12 ம் பத்தியில் கூறியுள்ள நிலையில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**